ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# முதன்மை மனித வளங்கள் அலுவலர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணி/பொறுப்புக்கள்:

### தொலைநோக்குகை

- வங்கியின் உபாயக் குறிக்கோள்களுக்கு துணையளிப்பதற்கு சிறந்த அத்துடன் புதுமையான எதிர்கால நடத்தைக்கான மனித மூலதன வடிவமைப்பு, கட்டமைப்பு, அவசியமான கடமைகள் மற்றும் உபாயங்கள் எனபவற்றை உருவாக்குவதை தலைமைவகித்து இயக்குதல்.
- மனித வள திணைக்கள மூலவளங்கள், முன்முயற்சிகள் மற்றும் ஏனைய உபாயச் செயற்பாடுகள் முழுமையாக, ஒருங்கிணைக்கப்பட்டவையாக அத்துடன் வங்கியின் விரும்பப்பட்ட பெறுபேறுகளுடன் அணிசேர்ந்தவையாகக் காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு அவற்றை வழிநடாத்துதல், பணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

### வலையமைப்பும் தொடர்புகளும்

- மனித மூலதனத் தீர்வுகளை விருத்திசெய்வதற்கு வெளிவாரி நிபுணர் (நிபுணர்களிடமிருந்து) அநுகூலம்பெறும் பொருட்டு, மனித மூலதன அமைப்புக்கள், ஆலோசகர்கள் மற்றும் மனித மூலதனத் தொழில்புரிவோருடன் உபாயக் கூட்டிணைப்புக்களை உருவாக்கிப் பேணுதல்.
- வேறுபட்ட மனித மூலதன பணித் தூண்களின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்யும் பொருட்டு, மனித வளத் திணைக்களம், ஏனைய முக்கிய செயல்படுத்தும் திணைக்களங்கள் மற்றும் தொழிற் பிரிவுகள் என்பவற்றுடன் தற்கால உறவுகளை உருவாக்கி அநுகூலம்பெறல்

### ஆலோசனை மற்றும் மதியுரை

- வங்கியின் நிகழ்ச்சிநிரலை இயக்குவதற்கு மனித மூலதன உபாயங்கள் மற்றும் நடத்தைகளுடன் தொடர்புடைய கருமங்களில் முகாமைத்துவத்திற்கு மதியுரை வழங்குதல் மற்றும் முகாமைத்துவத்திடமிருந்தும் தொழில் பிரிவுகளிலிருந்தும் உதவியினைப் பெற்றுக்கொள்ளல்.
- வங்கியின் முன்னணி மனித மூலதன அதிகாரியாகச் செயற்படுதல் அத்துடன் தொடர்புடைய திணைக்களங்களுக்கான தொடர்பு மயமாகவும் ஆலோசகராகவும் விளங்குதல்.

### பிரச்சனைகளை/ சிக்கல்களை இனங்கண்டு தீர்த்தல்

- வங்கி முழுவதுமான பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு புத்தாக்கமிக்க மற்றும் நவீன மனித மூலதனத் தீர்வுகளை வடிவமைத்தல் மற்றும் விருத்திசெய்தல்.

## 2.0 வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகளும் அனுபவமும்:

### 2.1 கல்வித் தகைமைகள்

- இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள் முகாமைத்துவத்தில்/மனித மூலதனத்தில்/ உளவியலில் விசேடத்துவ இளமானிப்பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள்).

**அத்துடன்/அல்லது**

இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மனித வள முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்புப் பட்டம்.

- மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும் மனித வளங்கள் முகாமைத்துவதில் விசேடத்துவ தொழில்சார் தகைமைகள் மேலதிகத் அநுகூலமாக கொள்ளப்படும்.

### 2.2 அனுபவம்

மனித வளங்களில் மூத்த முகாமைத்துவ வகிபாகத்தில் குறைந்தது 10 வருடங்களுடன் குறைந்தபட்சம் 15 ஆண்டுகளைக் கொண்ட அனுபவம். மனித மாற்றியமைத்தல்/மாற்று முகாமைத்துவம்/நிறுவனசார் அபிவிருத்தியில் அனுபவம் மேலதிக அநுகூலமாகக் கொள்ளப்படும். 500 இற்கும் குறையாத மனிதவலுவுடன்கூடிய கீர்த்திமிக்க நிறுவனமொன்றில் மனித வளப் பிரிவிற்கு தலைமைவகிக்கின்ற முதன்மை அலுவலரின் பதவியில் கணிசமான அனுபவ காலத்துடன்கூடிய தொழில்சார் நிபுணர்கள் விரும்பப்படுவர்.

### 2.3 விரும்பப்படும் தேர்ச்சிகள்

- மறுசீரமைத்தல் மற்றும் நிறுவனசார் மாற்றியமைத்தல் பற்றிய துறையில் அனுபவம்
- உபாய ரீதியாகச் சிந்தித்தலும் தலைமைத்துவத் திறன்களும்
- பணி ஆய்வுகள், பணிச் செயன்முறைப் பகுப்பாய்வு மற்றும் தொழில் கணிப்பீடு என்பவற்றில் அனுபவம்
- தொழில்நுட்ப மனித மூலதன முகாமைத்துவ நிபுணத்துவம்
- தொடர்பூட்டல் மற்றும் ஆட்களுக்கிடையிலான தொடர்புத் தேர்ச்சிகள், இசைவாகல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை, தொழிற்துறை உறவுகள் முகாமைத்துவம், எண்சார்ந்த அறிவு
- மனிதவள தரவுப் பகுப்பாய்வு, உளமார்ந்த பரிசோதனை, தகைமை வடிவமைத்தலில் அனுபவம்

**விண்ணப்பதாரிகள், கல்வி தகைமைகள் அத்துடன் பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் ஏதேனும் கட்டத்தில் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

## 3.0 தொழில்:

வங்கியின் தேவைப்பாடுகளைச் சார்ந்து நீடிப்பதற்கான தெரிவுடன் இரண்டு (02) ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படை

## 4.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

சந்தை நியமங்களுக்கு இணையாக கவர்ச்சிகரமான பொதி (பேசித்தீர்மானிக்கலாம்)

## தேர்வு நடைமுறை

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளினதும் அடிப்படையில் பொருத்தமான அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவத்தினை மத்திய வங்கியின் வெப்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2023.08.16 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முதன்மை மனித வளங்கள் அலுவலர் (ஒப்பந்த அடிப்படை)" பதவிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டர். தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையற்றதாகக் கருதப்படும். ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/ இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்காக தொடர்புகொள்ளப்படுவர்.

**பணிப்பாளர் - மனிதவளங்கள்**
**இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**
**தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715**